**மாதளை மா நகர சபை**
**மாதளைமாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல்28 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல்29 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாதளை மா நகர சபையின்2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 ஆண்டில் முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் மூலதன உதவி முறையே ரூபா 1,906,850 ஆல் மற்றும் ரூபா 3,429,255 ஆல் மிகையாக காட்டப்பட்டன.

(ஆ) ஆண்டிற்கான மூலதன செலவினம் ரூபா 3,716,158 ஆல் குறைத்துக் காட்டப்பட்டது.

(இ) பௌதீகரீதியாக காணப்படாத 11 வாகனங்களின் பெறுமதியான ரூபா 2,503,251 தொகை மோட்டார் வண்டி மற்றும் மாட்டுவண்டி கணக்கினுள் காட்டப்பட்டன.

(ஈ) கூட்டுத்தொகை ரூபா 1,460,430 ஆன ஒரு வாகனம் மற்றும் இரண்டு இயந்திரங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது பெற வேண்டிய ஓய்வுபெற்ற/சேவையை விட்டுச்சென்ற 134 அலுவலர்களின் ஊழியர் கடன் மீதியான ரூபா 945,301 நிதிக்கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டது.

(ஊ) நகர அபிவிருத்தி இணைந்த கணக்கின் மீதி ரூபா 1,392,000குறைவாக காட்டப்பட்டது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 213,108,106 ஆன 4 கணக்கு விடயங்களில் மீதிகள் மற்றும் அவைகளுக்கான துணைப்பதிவேடு மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளின் இடையில் ரூபா 10,399,611 ஆன வித்தியாசம் நிலவியது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டுஇறுதித் திகதியில்பெற வேண்டிய 12 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 70,122,861 ஆனதுடன்,அவற்றில் மூன்று வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து தீர்க்கப்படாமல் நிலவிய ரூபா 4,143,208 ஆன மீதியொன்றும் உள்ளடங்கிருந்தது.

(ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டுஇறுதித் திகதியில்செலுத்த வேண்டிய 3 கணக்கு மீதிகளின் பெறுமதிரூபா 144,257,421 ஆனதுடன்,அவற்றில் மூன்று வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து தீர்க்கப்படாமல் நிலவிய கூட்டுத்தொகை ரூபா 94,435,014 ஆன மீதியொன்றும் உள்ளடங்கிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக 7 கணக்கு விடயங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 57,664,115 ஆன மீதிகள் கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள்மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நி. பி. 571 | ரூபா 1,206,522 ஆன10 வேலைகளுக்கான காலவதியானநிறுத்திவைக்கப்பட்ட பணம்திர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி. பி.751,756,757(2) | மா நகர சபையில் நிலையான சொத்துகள் தொடர்பான பதிவேடு பராமரித்தல் மற்றும் அவை மீதான வருடாந்த மெய்மையாய்வு செய்யப்பட்டு உறியபடிவங்களினூடாக அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானமீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 47,092,890 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 25,024,503 ஆனது. முன்னைய ஆண்டுடன்ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில் ரூபா 22,068,387 ஆன வளர்ச்சியொன்று காணப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

நிதி விளைவுகளில் வளர்ச்சிக்கு 3 வருமான விடயங்களில் ரூபா 28,474,792 ஆன வருமானம் அதிகரித்தல் மற்றும் 2 செலவின விடயங்களில் ரூபா 7,207,421 ஆன செலவுகுறைதல் விஷேடமாக தாக்கம் விளைவித்திருந்தன.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்**

2009 ஆண்டு டென்டர் மூலம் வழங்கப்பட்டிருந்த சிறப்பங்காடிக் கட்டிடத் தொகுதியில் கடையறைகள் குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் 2014 முடிவின் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 4,396,394 ஆன ஒரே முறையில் செலுத்தும் பணம் அறவிடப்படாததன் மீது மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 11,310,092 ஆன 10வீதமான மாதாந்த தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 வீதவரி**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை வீதவரிமீதி ரூபா 23,718,426 காணப்பட்டது.

**2.3.3 ஏனைய வருமானம்**

(அ) நீர்க் கட்டணம்

மா நகர சபையினால் நடாத்திச்செல்லப்படும் நீர் விநியோக தொகுதி 2001 ஆண்டின் தேசிய நீர் வள சபைக்கு ஒப்படைக்கும் போது அறவிடப்படயிருந்த ரூபா 4.802,812 ஆன நிலுவை நீர்க் கட்டண மீதி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாடகைவருமானம்

2016 திசெம்பர் 31 இல் நிலுவை வாடகை மீதி ரூபா 3,088,591 ஆனது.

**2.3.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 205,500மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 38,504,300 ஆன தொகை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

**2.4 மிகை அறவிடல்**

மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) கீழ் முன்னைய ஆண்டினுள் விதிக்கப்பட்ட மிகை அறவிடல் தொடர்பாக ரூபா 96,851அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** நீண்ட காலம் முதல் நிலவிவரும்ரூபா 8,699,455 ஆன இனங்காணப்படாத கடன் கொடுத்தோர் மீதியொன்று தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** சபைக்கு சொந்தமான காணி குத்தகைக்கு வழங்கும் பொது அல்லது வெளியில் வழங்கும் போது மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் 36(i) ,(iii) மற்றும் 40(i) ஊ பிரிவின் பிரகாரம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், மாதளை எம்.சீ.பாதையினல் அமைந்துள்ள வெறுமையான 103

வெற்றுக் காணித்துண்டுகளில், விஜய மாவத்தையில் 16 காணிதுண்டுகளில் மற்றும் ஹிக்கொல்ல செக்ஷன் பார்க்கில் 2 ஏக்கர் 14 பர்சஸ் அளவில் உத்தரவு இல்லாத வசிப்பாலர்கள் தொடர்பாக உறிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ)** மாதளை மாநகர சபைக்கு சொந்தமாயிருந்த தியபுபுல காணி புது பொலிஸ் கட்டிடத் தொகுதியை நிர்மானிப்பதற்காக 2005 ஆண்டின் பொலசுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக வாகனம் நிறுத்துமிடம் மற்றும் வனிக வியாபார தொகுதியொன்று நிர்மானிப்பதற்கு நகர சபைக்கு பெற்றுக்கொடுக்க உடன்பட்டிருந்த பழைய பொலிஸ் நலையம் அமைந்துள்ள காணியை மீளாய்வாண்டு இறுதி வரையும் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ)** கொங்காவெல பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் 15.8 பர்சஸ் காணியின் அமைந்துள்ள கட்டிடம், வாசிகசாலை மற்றும் நூலகமொன்று நடாத்துவதற்கு 1970 முதல் குத்தகைக்கு வழங்கிருந்ததுடன், 5 வருடங்களுக்கு ஒரு முரை மதிப்பிடப்படாமல் 2003 ஆன்டின் செய்யப்பட்ட மதிப்பீடு மீது மீளாய்வாண்டிற்கும் குத்தகை வாடகைஅறவிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் பதவியனியினரின் அனுமதிக்கப்பட்ட 23 பதவிகளில் உள்ள 59 வெற்றிடங்களுக்காக முறையாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன், வேலை மற்றும் சுகாதார தொழிலாளர் பதவிகளை பெற்றிருந்த 30 மிகை ஊழியர்கள் பொருத்தமான சேவையின் ஈடுபடுத்தாமல் அலுவலக ஆவன நடவடிக்கை, கணனி நடவடிக்கை மற்றும் ஏனைய பதவிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 3.2 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மற்றும் பொது நிதியத்தால் ரூபா 119,230,940 ஆன தொகை செலவிடப்பட்டு நிர்மானிக்கப்பட்டிருந்த 4 மாடிகளைக்கொண்ட சிறப்பங்காடி கட்டிடத் தொகுதியில் இரண்டு மேல் மாடிகளில் கடையறைகள் வெவ்வேறாக பிரிக்கப்படும் வகையில் நிர்மானிக்கப்படாததனால் அவ் இரண்டு மாடிகளும் விளைவற்றதாக இருந்தன. இந்த வேலைக்கு தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்தினால் பெறப்பட்ட கடனுக்காக தவனை பணம் மற்றும் வட்டியாக ரூபா 11,414,245 ஆன தொகை வருடாந்தம் செலுத்தப்பட்ட போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும், கட்டிடத்திலிருந்து உழைக்கும் வருடாந்த குத்தகை வாடகை வருமானம் ரூபா 8,049,215 ஆக நிலவியது.

(ஆ) நகரத்தின் கோழி இறைச்சி வியாபாரத்தில் ஈடுப்பட்டுள்ள கடை சொந்தக்காரர்களிடமிருந்து பெற்ற ரூபா 645,000 மற்றும் சபை நிதியத்தின் ரூபா 151,500 உம் ஆக ரூபா 796,500 செலவிடப்பட்டு 2012 ஆண்டில் சபைக்கு சொந்தமான காணியொன்றில் நிர்மானிக்கப்பட்டிருந்த 44 கன மீற்றர் கொள்ளளவை கொண்ட உயிர் வாயு அலகு ஒன்று மற்றும் மின்சக்தி மற்றும் வழு சக்தி அமைச்சினால் ரூபா 3,200,000 ஆன ஒதுக்கீடு மீது 2015 திசெம்பர் வரை நிர்மானிக்கப்பட்டிருந்த 50 கன மீற்றர் கொள்ளளவு கொண்ட உயிர் வாயு அலகுவிளைவற்றதாக இருந்தது

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

**மாதளை மா நகர சபைக்கு சொந்தமான வாகன கொட்டில் புதுப்பித்தல்**

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் ரூபா 10,000,000 தொகை மற்றும் மிகுதி பணம் சபை நிதியத்தால் செலுத்துவதற்கு உடன்பட்டு மேற் குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தீர்மானித்திருந்ததுடன், அதற்காக ஒப்பந்தக்காரருடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை பிரகாரம் வேலை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமை மற்றும் சபை நிதியத்தினால் பணம் இடப்படாமை காரணமாகரூபா 13,706,250 ஆன ஒப்பந்தப் பணத்தின் ரூபா 4,022,722 ஆன அதாவது 29 சதவீதம் ஆன வேலைப்பகுதியொன்று மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு வேலை நிருத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த ரூபா 5,977,278 ஆன ஒதுக்கீடு பணம் உபயோகிக்கப்பட முடியாமல் இருந்ததுடன், அறைவாசி பூர்த்திச் செய்யப்பட்ட கட்டிடம் 2017 ஜூன் 30 வரையும் விளைவற்றதாக இருந்தது.

### 3.4 கருத்திட்டம் தாமதித்தல்

மீளாய்வாண்டின் சபை பொது நிதியத்தினால் செய்வதற்கு ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டிருந்த ரூபா 1,324,794 ஆன 9 வேலைகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 கழிவு பொருள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) UNESCAP நிருவனத்தின் ஒதுக்கீடு மீது ரூபா 4,500,000 செலவில் நிர்மானிக்கப்பட்டிருந்த டோல பாதையின் இயற்கை பசலை கொட்டியல் மற்றும் அதனூடான 43 உபாங்க மற்றும் உதிரிபாகங்கள் 2015 மார்ச் முதல்விளைவற்றதாக இருந்தது.

(ஆ) கழிவு பொருட்கள் இடப்படும் வாரியபொலவத்த தனியார் காணி தொடர்பாக பிரதேச மக்களின் எதிர்ப்பு காரணமாக சபைக்கு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரச்சபைக்கு எதிராக உயர் நீதிமனறத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், வழக்கு கட்டணமாக ரூபா 3,336,215 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தற்போது கழிவு பொருட்கள் இடப்படும் காணி தொடர்பான பிரச்சினைக்கு தீர்வாக கழிவு பொருட்கள் இடுவதற்கு 2010 ஆண்டினுள் ரூபா 2,000,000 தொகை செலுத்தி புதிய காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் அக் காணியில் முறையாக கழிவு பொருட்கள் இடப்படும் முறைமையொன்று ஆரம்பிக்காமை காரணமா காணிவிளைவற்றதாக நிலவியது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்களிற்கு இடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதீடிற்கும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில்,கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 8 செலவின விடயங்களில்ஒதுக்கீட்டு எல்லையை மீறி ரூபா 1,952,308 ஆன செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த போது அதற்காக முறையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

---

மா நகர சபை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிக்கு ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்ததுடன்,போதியளவு ஆளனி இல்லாமையினால் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---

மீளாய்வாண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் இரண்டு மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பதவியணியினர்முகாமைத்துவம்.

(ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு.

(இ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோரகட்டுப்பாடு.

(ஈ) பாதீடு கட்டுப்பாடு.